www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 9

தேர்வு எண் | | | | | | |

# ஆண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

நேரம் : 3.00 மணி] **சமூக அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 100

## பகுதி – I

**I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக.** 14x1=14

1. பெலப்பொனிஷியப் போர் --------- மற்றும் -------- ஆகியோர்களுக்கிடையே நடைபெற்றது.
   அ) கிரேக்கர்கள் மற்றும் பாரசீகர்கள் ஆ) பிளேபியன்கள் மற்றும் பெட்ரீசியன்கள்
   இ) ஸ்பார்ட்டா மற்றும் ஏதென்ஸ் நகரவாசிகள் ஈ) கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்கள்
2. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துமுறை யாது?
   அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ் – பிராமி ஈ) கிராந்தம்
3. நீராவி படகுப்போக்குவரத்துச் சேவையை நிறுவியர் யார்?
   அ) ஆர்க்ரைட் ஆ) சாமுவேல் கிராம்ப்டன் இ) ராபர்ட் ஃபுல்டன் ஈ) ஜேம்ஸ்வாட்
4. கிருஷ்ண தேவராயர் -------- ன் சமகாலத்தவர்.
   அ) பாபர் ஆ) ஹுமாயூன் இ) அக்பர் ஈ) ஷெர்ஷா
5. -------- புவியின் முக்கிய ஆற்றல் மூலமாகும்.
   அ) சூரியன் ஆ) சந்திரன் இ) நட்சத்திரங்கள் ஈ) மேகங்கள்
6. பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு.
   அ) புவி மேலோடு ஆ) கவசம் இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
7. உலகிலேயே மிகப்பெரிய மக்களாட்சி நாடு.
   அ) கனடா ஆ) இந்தியா
   இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈ) சீனா நாடுகள்
8. பல்வேறு அரசியல் கட்சிகளைத் தேசியக் கட்சியாகவோ அல்லது மாநிலக் கட்சியாகவோ அங்கீகரிப்பவர்/அங்கீகரிப்பது.
   அ) குடியரசுத்தலைவர் ஆ) தேர்தல் ஆணையம்
   இ) நாடாளுமன்றம்
   ஈ) தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின் பெயரில் குடியரசுத் தலைவர்.
9. மழைக்காடுகள் பல்லுயிர்த் தொகுதி அதிகளவு விவசாயத்திற்குப் பயன்படுத்த இயலாததற்குக் காரணம்.
   அ) மிக அதிகப்படியான ஈரப்பதம் ஆ) மிக அதிகமான வெப்பநிலை
   இ) மிக மெல்லிய மண்ணடுக்கு ஈ) வளமற்ற மண்
10. உலக அமைவிடத்தை கண்டறியும் தொகுதியில் (GPS) பயன்படுத்தப்படும் செயற்கை கோள்கள்.
    அ) 7 ஆ) 24 இ) 32 ஈ) 64
11. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையிடம்.
    அ) மும்பை ஆ) சென்னை இ) கல்கத்தா ஈ) டெல்லி
12. -------- காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திர மேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.
    அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்
13. மூன்றாம் துறையில் அடங்குவது.
    அ) போக்குவரத்து ஆ) காப்பீடு இ) வங்கியியல் ஈ) அனைத்தும்
14. ஏழை மக்கள் இடப்பெயர்வை மேற்கொள்வது.
    அ) வாழ்வாதாரத்திற்காக ஆ) வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள
    இ) சேவைக்காக ஈ) அனுபவத்தைப் பெறுவதற்காக

## பகுதி – II

**II. ஏவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:**
**(வினா எண் 19 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** 10x2=20

15. இடைக்காலத்தில் நிலப்பிரபுத்துவம் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது?
16. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் – விவரி.
17. ஹீனயானம் மற்றும் மகாயனம் பற்றி குறிப்பு வரைக.
18. கடல் நீரோட்டங்களைத் தோற்றுவிக்கும் காரணிகள் யாவை?
19. உயிரினச் சிதைவு என்றால் என்ன?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

20. மத எதிர்சீர்திருத்தம் பற்றி ஒரு குறிப்பு வரைக.
21. பேரிடர் முதன்மை மீட்புக் குழு என்பவர் யார்?
22. மக்கள் அடர்த்தி என்றால் என்ன?
23. அடிப்படை உரிமைகள் யாவை?
24. இரு சக்கர வாகனம் ஓட்டும் போது தலைக்கவசம் அணிவதன் நன்மைகள் யாவை?
25. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன?
26. உணவுப் பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும், உணவில்லாத பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் எழுதுக.
27. அந்நியச் செலாவணி என்றால் என்ன?
28. கர்னல் பென்னிகுயிக் பற்றி சிறுகுறிப்பு எழுதுக?

## பகுதி – III

**III. எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:**
**(வினா எண் 36க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** 10x5=50

29. மங்கோலியர்கள் என்பவர் யார்? அவர்கள் சீனாவை எவ்வாறு ஆட்சி செய்தனர்?
30. தமிழக வரலாற்றில் "சோழர்களின் காலம் ஒரு உன்னதக் காலம்" – விளக்கவும்.
31. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
    i) கிரேக்கர்கள் -------- என்ற இடத்தில் பாரசீகர்களைத் தோற்கடித்தனர்.
    ii) இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு வந்த ஐரோப்பியர் ----------
    iii) மிகப் பரந்த புவிச் சூழ்நிலை மண்டலத்தை -------- என்கிறோம்.
    iv) சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் -------- ஆவர்.
    v) நிலத்தடி நீர் என்பது -------- வளங்களின் ஓர் எடுத்துக்காட்டாகும்.
32. நில நடுக்கத்தின் போது கட்டிடத்திற்குள் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
33. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது – தெளிவு படுத்துக.
34. வானிலை சிதைவு என்றால் என்ன? வகைப்படுத்துக.
35. கண்டத்திட்டு மற்றும் கண்டச் சரிவு பற்றிக் குறிப்பு வரைக.
36. ஒற்றையாட்சி முறையின் நிறைகளை விவரி.
37. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
38. **வேறுபடுத்துக.**
    i) வானிலை மற்றும் காலநிலை
    ii) இயற்சிதைவு மற்றும் வேதியல் சிதைவு
    **காரணம் அறிக** : கண்டத்திட்டுகள் சிறந்த மீன்பிடித்தளங்களாகும்.
39. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரி.
40. தமிழகத்தின் நீர் ஆதாரம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
41. புதுப்பிக்க தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்கதகாத வளங்கள் – வேறுபடுத்துக.
42. சாலை பாதுகாப்பு விதிகளை பற்றி விவரி.

## பகுதி – IV

**IV. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 2x8=16

43. அ) கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளை <u>உலக வரைபடத்தில்</u> குறிக்கவும்:
    i) செயல்படும் எரிமலைகள் இரண்டு
    ii) பசிபிக் நெருப்பு வளையம்
    iii) புவி அதிர்ச்சி மண்டலம் (ஏதேனும் இரண்டு)
    iv) ஆல்ப்ஸ் மலை
    v) கிழக்கு ஆப்பிரிக்காவின் பிளவு பள்ளதாக்கு
    vi) இமயமலை
    vii) நன்னம்பிக்கை முனை
    viii) சஹாரா வெப்ப பாலைவனம்

    **(அல்லது)**

    ஆ) <u>உலக வரைபடத்தில்</u> கீழ்க்கண்டவற்றை குறிக்கவும்.
    i) ஏதேனும் இரண்டு டெல்டாக்கள்
    ii) பிரெய்ரி
    iii) டௌன்ஸ்
    iv) தூந்திர பல்லுயிர்த் தொகுதி
    v) வெப்ப மண்டலக்காடுகள் பல்லுயிர்த் தொகுதி
    vi) ஹீவாங்கோ ஆறு
    vii) பசிபிக் பெருங்கடல்
    viii) கோபி குளிர் பாலைவனம்

44. அ) சூழ்நிலை மண்டலத்தின் பல்வேறு கூறுகளை விவரி. (அல்லது)
    ஆ) சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner